3. கவன ஈர்ப்பு.

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய வரியை வஜா செய்வது, அரசுக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் ஒத்தி வைப்பது குறித்து.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை தவறி விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருப்பதால் இந்த விவசாயிகள் செலுத்த வேண்டிய அரசுக் கடன்களையும், கூட்டுறவுக் கடன்களையும் ஒத்தி வைக்க வேண்டியும், அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் இந்த ஆண்டில் உரிய காலத்தில் போதிய மழை பெய்யாததன் காரணமாக பெரும்பாலான பகுதிகளில் வழக்கமான விளைச்சலைப் பெற இயலாத போதிலும், அதை விட ஒரு சிறிதே குறைந்த விளைச்சலுடன் சம்பா அறுவடை முடிவடைந்துள்ளது என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். வளர்ந்து வரும் நெல், வேர்க்கடலை, கரும்பு முதலிய பயிர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. ஆனால், அதிகமான பலனை எதிர் பார்க்க முடியாது. 1973 ஆம் ஆண்டு டிசம்பருக்குப் பின்னர் மழை பெய்ய வில்லை. லத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் செய்யூர் பிர்க்காவில் உள்ள செய்யூர், சிக்கிணங்குப்பம் கிராமங்களின் சில பகுதிகளில் பயிர்கள் சாவியாகப் போனதற்கு வரித் தள்ளுபடி செய்ய முறையீடுகள் வரப்பெற்றன. இந்த கிராமங்களில் பயிர் விளைச்சல் மதிப்பீட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரித் தள்ளுபடி அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தனியே நடவடிக்கை எடுத்து வருகிறார். ஏனைய பிர்க்காக்களைப் பொறுத்த வரை அப்பகுதிகளில் பயிர்கள் சாவியாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிப்பதற்கான பிரச்சினை எதுவும் தற்போது எழவில்லை.

வறட்சிக் காலத்தில் கடன் தவணைத் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு உழவர்களுக்கு இயலாதபோது அரசுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகைகளை "மெதுவாக வசூலிக்கும் கொள்கையைப்' பின்பற்றுமாறு அல்லது வசூலிப்பதை ஒத்திப் போடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவது அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது.

1974 ஏப்ரல் 24]   [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் பாக்கிகளை வசூலிப்பதை ஒத்திப் போடுவதற்குத் தங்களுடைய விருப்ப உரிமையைப் பயன்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

உழவர் சங்கத்திடமிருந்து முறையீடுகள் வந்ததன் பேரில், மோசமான பருவ நிலைகளால் அல்லது ஏனைய இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்துவது குறித்து நிவாரணம் அல்லது சலுகை அளிக்குமாறு முறையீடுகள் வரப்பெற்றால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவற்றை உடனடியாக ஆய்வு செய்து, உண்மையிலேயே இடர்ப்பாடுள்ள நேர்வில் விதிகளையொட்டி தாம் அவசியமெனக் கருதுகிற நிவாரணத்தை அல்லது சலுகைகளை அவர்கள் வழங்கலாமென்று அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இறுதியான ஆணைகளைப் பிறப்பிக்க முடியாத முறையீடுகளின் நேர்வில், அவற்றிற்கு ஏற்ற சலுகைகளை வழங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய பரிவுரைகளுடன் அவற்றை வருவாய்த் துறை வாரியத்திற்கு அல்லது அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பயிர் விளைச்சல் 36 காசும் அதற்குக் குறைவாக (அதாவது 6 அணவுக்குக் குறைவாக) இருக்கின்ற நேர்வில் உழவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்க குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்படலாமெனவும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆகவே, வரித் தள்ளுபடி கேட்கப்பட்டபோது அவ்வாறே வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதும் அரசுக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் வசூலிப்பதில் நிவாரணம் அளிப்பதற்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதென்பதும் மேற்கூறியவற்றால் தெரிய வரும்.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில், மதுராந்தகம் வட்டத்தில், லத்தூர் பிர்க்காவில் 2 கிராமங்களில் வறட்சி ஏற்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் மதுராந்தகம் வட்டத்திலே, மதுராந்தகம் ஏரியும், அதனால் பயன் அடையக்கூடிய 18 ஏரிகளைத் தவிர, பாலாறு பேசினை ஒட்டியிருக்கக்கூடிய கிராமங்களைத் தவிர, எஞ்சிய அனைத்து கிராமங்களிலேயும் கிணறு இல்லாது, மழையை நம்பியிருக்கக் கூடிய அனைத்து கிராமங்களிலேயும் முதல் போகமானது சாவியாகி இருக்கிறது. கிணற்றுப் பாசனம் இருந்த கிராமங்களில் மட்டுமே சம்பா அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி கிணற்றுப் பாசனம் அல்லாத, ஏரியை நம்பியிருக்கக்கூடிய அந்த நிலங்களுக்கு வரி வஜா செய்வதோடு, அனாவாரி சர்ட்டிபிகேட்டையும் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய வரியை வஜா செய்வது, அரசுக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் ஒத்தி வைப்பது குறித்து

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து வருவாய்த் துறை அதிகாரிகளோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தியபோது மாண்புமிகு உறுப்பினர்களும் இருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியாக ஆணையிடப் பட்டிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். இந்தப் பகுதியில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று முன்மொழிகிறேன்.

"(1) திரு. எம். இராமநாதன்
(2) திரு. எம். சங்காலிங்கம்
(3) திரு. எஸ். டி. ஆதித்தன்
(4) திரு. கே. ராஜாராம்
(5) திரு. வில்சன் அப்பலோஸ்"

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

(1) திரு. எம். இராமநாதன்
(2) திரு. எம். சங்காலிங்கம்
(3) திரு. எஸ். டி. ஆதித்தன்
(4) திரு. கே. ராஜாராம்
(5) திரு. வில்சன் அப்பலோஸ்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS